பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல:** 03 / 2019

இல:20, வோட் பிளேஸ்
கொழும்பு-07
2019.01.29

பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள்,
வளாக அதிபர்கள்,
நிறுவகப் பணிப்பாளர்கள்.

**மாணவர் உதவுதொகைத் திட்டம் மற்றும் உதவு தொகைக் கொடுப்பனவினைச் செலுத்தல்**

ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல 11/2018 இன் 5 ஆவது பந்தியினை திருத்தவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் 2019.01.24 ஆந் திகதி இடம்பெற்ற அதனுடைய 1002 ஆவது கூட்டத்தொடரின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 11/2018 சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட 5 ஆவது பந்தியினை உள்ளடக்குவதற்காக இச் சுற்றறிக்கையானது வெளியிடப்படுகிறது.

2. இச் சுற்றறிக்கை அமுலுக்கு வருவதுடன், ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் இலக்கம் 856, 900, 942 மற்றும் 11/2018 ஆகியன இரத்துச் செய்யப்படும்.

**3. மாணவர் உதவுதொகைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

எந்தவொரு மாணவரும் கீழ் காட்டப்படும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருப்பின் உதவுதொகைக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

3.1 மாணவர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.2 அவன் / அவள் பல்கலைக்கழகத்தில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் முழுநேரக் கற்கைநெறியொன்றினைத் தொடர்வதற்காக உள்ளக மாணவராகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

3.3 பெற்றோர்களின் வருமான எல்லை

(அ) 2017/2018 கல்வியாண்டு முதல் எதிர்காலத்தில் நடைமுறைக்கு வரும் விதத்தில் பெற்றோர்களின் வருடாந்த வருமானம் ரூபா. 500,000/- இற்கு சமமாக அல்லது அதற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 2017/2018 கல்வியாண்டு மற்றும் அதன் பிற்பாடு எதிர்காலத்தில் பதிவுசெய்கின்ற மாணவர்களுக்கு மேற்படி வருமான எல்லையானது நடைமுறைகக்கு வரும். எவ்வாறிருப்பினும், இச் சுற்றறிக்கை அமுலுக்கு வரும் திகதிக்கு எந்தவொரு உதவுதொகையினையும் பெறாத மாணவர்கள், அவர்களின் பெற்றோர்களின் வருமானமானது திருத்தப்பட்ட வருமான எல்லைக்குள்இருப்பின், உதவுதொகையினைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

3..4 மேலே 3.3 இல் காட்டப்பட்டிருக்கும் விதத்தில் சலுகையானது வருமான எல்லைக்குச் சேர்க்கப்படும்.

(அ) 19 வயது அல்லது அதற்குக் கீழான வயதில் இருக்கும் கூடியபட்சம் 03 மாணவர்கள் வரை பாடசாலை செல்கின்ற சகோதரன் / சகோதரிக்காக ரூபா.24,000/- வீதம்.

(ஆ)இலங்கையின் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் அல்லது உயர்கல்வி நிறுவகத்திலும் கற்கை நெறியொன்றினைத் தொடர்கின்ற மாணவர் ஒருவருக்கு ரூபா.36,000/- வீதம் இரண்டாவது பிள்ளையில் இருந்து மேலே செல்லும் விதத்தில் வழங்கப்படுவதுடன் இத் தகைமையானது தீர்மானிக்கப்படுவது முதல் பிள்ளையானது உதவுதொகை / மகாபொல என்பவற்றைப் பெறாத பட்சத்தில் ஆகும்.

3.5 நிதியுதவியினை வழங்குவதற்காக மாணவர்களைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தில், மாணவரின் பெற்றோர்கள் பிரிந்திருந்தால் அதனை உறுதி செய்து கொள்வதற்குரிய ஆவணச் சாட்சிகளை முன்வைத்து அல்லது அவ்வாறு பிரிதல் தொடர்பிலான எந்தவொரு சட்டபூர்வமான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்காத பட்சத்தில், உரிய பொலிஸ் பிரிவு அறிக்கையுடன் கிராம உத்தியோகத்தர் அறிக்கை பெறப்பட்டதன் பிற்பாடே வருமான எல்லையினைத் தீர்மானிப்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

3.6 மாணவர் தொழிலொன்றில் ஈடுபட்டு இருப்பின், அவ் வருமானம் மூலம் பெறப்படும் அவர்களின் (அவன் / அவள்) வருமானம், பெற்றோர்களின் வருமானத்திற்கு சேர்க்கப்படல் வேண்டும்.

3.7 மாணவர் தொழிலில் ஈடுபடின் மற்றும் திருமணம் செய்திருப்பின், மாணவர் மற்றும் அவர் மணமுடித்தவர் வேறு குடும்பமாக கருதப்பட வேண்டுமென்பதுடன் இச் சுற்றறிக்கையின் 3.3 மற்றும் 3.4 பிரிவிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் பிரகாரம் உதவுதொகையினைப் பெற்றுக் கொடுப்பதற்கான அவர்களின் (அவன் / அவள்) தகைமையானது கருத்திற் கொள்ளப்படும்.

4. மாணவர்கள் தெரிவு

4.1 முதல் வருட மாணவர்கள் தெரிவு

அ. பல்கலைக்கழக/ உயர்கல்வி நிறுவகங்கள் மூலம் உதவுதொகைக்கான விண்ணப்பம், பதிவு செய்வதற்கான ஆவணங்களுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஆ.சரிவரப் பூர்த்தி செய்யப்பட்ட உதவுதொகை விண்ணப்பமானது 3 கிழமைகளுக்குள் அல்லது மாணவரின் பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்துடன் பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவகங்களுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இ. நிதியுதவிக்கு தகுதி பெறுகின்ற மாணவர்களின் பட்டியல், மேலே (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இறுதித்திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வெளியிடப்படல்வேண்டும்.

ஈ. தகுதி பெறுகின்ற மாணவர்களுக்கான உதவுதொகை வழங்குவது கல்வியாண்டு ஆரம்பிக்கப்படுவதுடன் ஒரு மாத காலத்தினுள்ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

4.2 வருடாந்த தெரிவு

இச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டிருக்கும் ஏற்பாடுகளின் பிரகாரம், பல்கலைக்கழக / உயர் கல்வி நிறுவகங்களின்மூலம் வருடாந்தத் தெரிவானது இடம்பெறும்.

5. நிதியுதவித் தவணைகளின் பெறுமதி

இச் சுற்றறிக்கை அமுலுக்கு வரும் நாள் முதல் உதவுதொகைக்காக தகுதி பெற்றிருக்கின்ற சகல மாணவர்கள் மற்றும் உதவுதொகையினைப் பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாணவர்களும் ஒரு மாணவர்க் குழுவின் கீழ் ( திறமை மற்றும் சாதாரணம் என்ற ரீதியில் இரண்டு குழுக்களாக வகைப்படுத்தாது) தெரிவு செய்து நியமிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதனடிப்படையில் அவர்களுக்கு உதவுதொகைத் தவணைமாதாந்தம் ரூபா.4000/-

வீதம் வழங்கப்படுவதுடன்,வருடத்திற்கு கூடியபட்சம் 10 தவணைகளுக்குட்பட்டு செலுத்தப்படல் வேண்டும்.

6. **நிதியுதவி செலுத்துதல் தொடர்பிலான வேறு நிபந்தனைகள்**

6.1 பொய்யான மற்றும் போலியான பிரகடனங்களை வழங்குகின்ற மாணவர்கள் அல்லது தமது விண்ணப்பத்தில் ஏதாவதொரு தகவலை வெளிப்படுத்துவதில் தயக்கத்தை தெரிவிக்கும் மாணவர் ஒருவரின், (அவன் / அவள்) பல்கலைக்கழகத்தில் / உயர்கல்வி நிறுவகங்களின் உள்ளக மாணவர் என்ற அந்தஸ்தானது இரத்துச் செய்யப்பட நேரிடும்.

6.2 உதவுதொகையினைப் பெறுவதற்காக விண்ணப்பித்திருக்கும் அல்லது உதவுதொகையினைப் பெறும் மாணவர்கள் மூலம் குடும்பத்தின் வருமானம், விவாக நிலை, தொழில் மூலமான வருமானம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில், பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அல்லது நிறுவகத்தின் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

6.3 நிதியுதவியினைப் பெறாத மாணவர்கள், தங்கள் பெற்றோர்களின் வருமானத்தில், ஏற்றுக்கொள்ளப்பட முடியுமான அதாவது இயற்கை வழி அல்லது வேறு காரணிகள் காரணமாக மாற்றம் ஏற்பட்டு அது பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அல்லது நிறுவகத்தின் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்படின்,பல்கலைக்கழக நிதியுதவிக்காக விண்ணப்பித்தலுக்கான அவகாசம் அத்தகைய மாணவர்களுக்கு அளிக்கப்படல் வேண்டும்.

6.4 பல்கலைக்கழகத்தில் / உயர்கல்வி நிறுவகத்தில் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்த காலப்பகுதியினுள் மாத்திரமே உதவுதொகைக் கொடுப்பனவானது வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு உதவுதொகையினைப் பெறும் நபர் எந்தவொரு காரணத்தினாலும் கற்கைநெறியினை தற்காலிகமாக நிறுத்தினால் அல்லது கற்கை நெறியினைத் பூரணப்படுத்துவதற்கு முதல் பல்கலைக்கழகத்தின் / உயர்கல்வி நிறுவகத்திலிருந்து வெளியேறினால் அது தொடர்பில் பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கு அல்லது நிறுவகத்தின் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

6.5 எந்தவொரு மாணவருக்குமான உதவுதொகைக் கொடுப்பனவானது, பின்வரும் காரணிகளில் ஒன்று அல்லது பல காரணிகளால் சம்பூரணமரக அல்லது தற்காலிகமாக இடைநிறுத்தப்படலாம்.

(அ) மாணவரொருவர் எந்தவொரு பரீட்சையினையும் முழுமையாக சித்தியடையாத சந்தர்ப்பத்தைத் தவிர்த்து, முதல் வருடத்தில் பரீட்சைக்குத் தோற்றி எந்தவொரு

மாணவரும் இரண்டாம் வருடத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட கற்கை நெறியினைத் தொடர்ந்து கொண்டிருப்பின், அத்தகைய மாணவருக்கு உதவுதொயையானது வழங்கப்படல் வேண்டும்

(ஆ) மாணவரொருவர் தமது கற்றல் நடவடிக்கைகளில் உற்சாகத்துடன் ஈடுபடாத போது,

(இ) மாணவர் ஒருவர் ஒழுக்கவீனமாக நடந்து கொள்ளும் பட்சத்தில்,

(ஈ) இத்தகைய எந்தவொரு ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணிகளினாலும் பல்கலைக்கழக / உயர்கல்வி நிறுவகத்தின் (பல்கலைக்கழக அதிகாரிகள்) அதிகாரிகளின் விருப்பின் பேரில் தீர்மானிக்கப்படும்.

6.6 நிறுத்தப்பட்ட அல்லது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட உதவுதொகையினை மீண்டும் பெற்றுக் கொள்வது தொடர்பிலான விடயங்களில், பல்கலைக்கழக அதிகாரிகள் தமது சுய விருப்பதினைப் பிரயோகித்தல் வேண்டும்.

6.7 தகுதி பெறுகின்ற சகல மாணவர்களுக்கும் கல்வியாண்டொன்றிற்காக கூடியபட்சம் மாதாந்தம் 10 தவணைகள் அடிப்படையில் கொடுப்பனவானது மேற்கொள்ளப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பூரண அனுமதியின்றி எந்தவொரு நிலைமையின் கீழும் மாதாந்தம் 10 தவணைகளை விட குறைவான அல்லது அதற்குக் கூடுதலான கொடுப்பனவைச் செலுத்தலாகாது.

6.8 மகாபொல புலமைப்பரிசிலுக்குரிய நிபந்தனைகள்பொதுவாகஇவ் உதவுதொகைத் திட்டத்திற்கும் பொருந்தும்.

6.9 மகாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு இவ் உதவுதொகைக் கொடுப்பனவானது வழங்கப்பட மாட்டாது.

**7. 6.1. முதல் 6.9 வரை குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உதவுதொகைக் கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான உரிய நிபந்தனைகள் மாணவர்கள் அறிந்து கொள்ளும் விதத்தில்உதவுதொகை விண்ணப்பத்துடன் இணைத்து வழங்கப்படல் வேண்டும்.**

8. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், உதவுதொகை மற்றும் மகாபொல மீளளிப்பு

8.1 பல்கலைக்கழக / உயர்கல்வி நிறுவகங்களின் நிதியத்தின் மூலம் மாதாந்த உதவுதொகை தொகையினைச் செலுத்துவதற்கும் மாதாந்தம் அப் பணத்தினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால்மீளளிப்புச்செய்து கொள்ளும்படியும் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் I மற்றும் படிவம் II இன் மூலம் மீளளிப்புக் கோரிக்கையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்படல் வேண்டும்.

8.2 மகாபொல மற்றும் உதவுதொகைக் கொடுப்பனவு நடவடிக்கைகளினை ஒருங்கிணைப்பதற்காக சகல பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களின், பதிவாளரின் தலைமையில் குழுவொன்றினை நியமித்தல் வேண்டும். நிதிப் பொறுப்பாளர், சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் மற்றும் மாணவர் நலன்புரிக்குப் பொறுப்பான அதிகாரி ஆகியோர் இக் குழுவின் இதர உறுப்பினர்களாவர்.

8.3 கீழே காட்டப்படும் படிவம் III இனைப் பயன்படுத்தி காலாண்டினை அடியொட்டி மகாபொல மற்றும் உதவுதொகைக் கொடுப்பனவு தொடர்பிலான முன்னேற்ற அறிக்கையானது சகல பல்கலைக்கழகங்களினாலும் (8.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குழு) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்வைத்தல் வேண்டும்.

அ) 01 ஆம் காலாண்டு - ஏப்ரில் 20 ஆந் திகதியன்று அல்லது முன்னர்

ஆ) 02 ஆம் காலாண்டு- ஜுலை 20 ஆந் திகதியன்று அல்லது முன்னர்

இ) 03ஆம் காலாண்டு- ஒக்தோபர் 20 ஆந் திகதியன்று அல்லது முன்னர்

ஈ) 04 ஆம் காலாண்டு- ஜனவரி 20 ஆந் திகதியன்று அல்லது முன்னர்

8.4 சகல வருடத்தின் இறுதியிலும் உதவுதொகை / மகாபொல புலமைப்பரிசில் பெறுநர்களின் உண்மைப் தொகை மற்றும் உதவுதொகை / மகாபொல புலமைப்பரிசில்களின் உண்மைப் பெறுமானங்கள் , இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் IV மற்றும் மாதிரிப் படிவம் V இன் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. இது குறித்த மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்குத் தேவைப்படின், தயவு செய்து011-2123485 என்ற தொலைபெசி இலக்கத்தின் வாயிலாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிக் கணக்காளரை தொடர்பு கொள்ளவும்.

10. 2019.01.01 ஆந் திகதி முதல் இச்சுற்றறிக்கையானது அமுலுக்கு வரும்.

ஒப்பமிட்டது. பேராசிரியர் மொஹன் த சில்வா

தலைவர்

பிரதிகள்:

1. செயலாளர் / நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம் / ப.மா.ஆ
3. உப தலைவர் / ப.மா.ஆ
4. செயலாளர் / ப.மா.ஆ
5. பல்கலைக்கழகங்களின் பீடாதிபதிகள்
6. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
7. கணக்காளர் / ப.மா.ஆ
8. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள்
9. உயர் கல்வி நிறுவகங்கள் / நிறுவகங்களின் நூலகர் / சிரேஷ்ட உதவி நூலகர் / உதவி நூலகர்
10. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள் - உயர்கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
11. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள், உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர்கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. உள்ளகக் கணக்காய்வாளர்- ப.மா.ஆ
13. கணக்காய்வாளர் நாயகம்

கோப்பு இல: ப.மா.ஆ / எப் 09/ நிதியுதவி /2018